2012 மே 16]

2-7-2011 ஆம் தேதியன்று நீலகிரி வயநாடு தோட்ட அதிபர்கள் சங்கத்திற்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தம் ஆகியவற்றில், தோட்ட அதிபர்கள் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு 15-6-2008 தேதியிட்ட அரசினால் பிறப்பிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதிய அரசாணையை அமலாக்கம் செய்வதற்கு இணையான, குறைந்தபட்ச ஊதியத்திற்கு குறைவில்லாமல் ஒருங்கிணைந்த தினச் சம்பளம், நிலையான அகவிலைப்படி மற்றும் இதரபடிகள் வழங்கவும், படிகள் (அலவன்ஸ்) என்ற பகுதியின்கீழ் வழங்கப்பட்டு வந்த தொகைக்கு பிராவிடன்ட் ஃபண்ட், போனஸ் மற்றும் தொழிலாளர் நலச் சட்டங்களில் உட்படுத்தப்பட்டுள்ள விடுப்புப் பயன் ஆகியவற்றிற்கும் சேர்த்து 1-6-2011 முதல் வழங்கவும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இத்தொழிலுக்கு நான்கு ஆண்டுகளுக்கொருமுறை குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்யும் முறை இருந்து வருவதால், 14-6-2012-க்குப் பிறகுதான் இத்தொழிலுக்கு குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்யப்படும்.

250—

தொழிற்சாலை இயக்குதல்

வினா எண் 172—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை, ஸ்ரீரங்கநாதன் வாக்வல் பிரைவேட் லிமிடெட் தொழிற்சாலையை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சி.த. செல்லபாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

ஸ்ரீரங்கநாதன் வாக்வல் பிரைவேட் லிமிடெட், 7/09 தென்னம்பாளையம் பிரிவு, அரசூர், கோயம்புத்தூர்-641 407 என்ற நிறுவனம், மொத்தம் 330 தொழிலாளர்கள் பணிபுரியும் நிறுவனம் ஆகும். இந்நிறுவனத்தில் கோவை மாவட்ட பொறியியல் பொது தொழிலாளர் சங்கம் (ஏஐடியுசி) செயல்பட்டு வருகிறது. ஏஐடியுசி சங்கத்தின் நிர்வாகிகள் ஐந்து பேரை நிர்வாகம் பணியிடை நீக்கம்

செய்துள்ளதாலும், ஊதிய உயர்வு கோரியும் கடந்த 9-5-2011 முதல் 31-5-2011 வரை இச்சங்கத்தை சார்ந்த தொழிலாளர்களில் பெரும்பான்மையோர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

இப்பிரச்சினை குறித்து தொழிற்தகராறுகள் சட்டம், பிரிவு 2(கே)-இன்கீழ் தொழிற்தாவா ஒன்றினை எழுப்பியது. இத்தாவாவின் மீது 31-5-2011 அன்று கோவை, தொழிலாளர் இணை ஆணையர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற சமரச பேச்சுவார்த்தையின் பயனாக தொழிற்தகராறுகள் சட்டப் பிரிவு 12(3)-ன்கீழ் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை விலக்கிக்கொண்டு, 1-6-2011 முதல் மீண்டும் பணிக்குத் திரும்பியுள்ளனர். தற்போது இத்தொழிற்சாலையில் தொழில் அமைதி நிலவுகிறது.

251—

ஊதிய உயர்வு

வினா எண் 173—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பஞ்சாலை தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் பஞ்சாலை தொழில் என்பது மிகப்பெரியதும், முக்கியமானதுமான தொழில் ஆகும். கடந்த காலங்களில் பஞ்சாலைகளில் ஊதிய உயர்வு நிர்ணயங்கள் மற்றும் ஒப்பந்தங்களின்படியே நிர்ணயம் செய்யப்பட்டு வந்த நிலையில், தொழிற்சங்கங்கள், பஞ்சாலை நிர்வாகங்களுக்கு எதிராக ஊதிய உயர்வு உள்ளிட்ட பொதுக் கோரிக்கைகளை எழுப்பின.

2. மேற்படி, தொழிற்தாவாவின்மீது தொழிலாளர் ஆணையர் மேற்கொண்ட பேச்சுவார்த்தையில் எவ்வித முடிவும் ஏற்படாத நிலையில், அரசாணை (டி) எண் 638, தொழிலாளர் மற்றும்

வேலைவாய்ப்புத் துறை, நாள் 13-9-2011-ன்படி, சென்னை, தொழில் தீர்ப்பாயத்தின் தீர்விற்கு அனுப்பியது. அத்தாவா 1,803 பஞ்சாலைகளை உள்ளடக்கியது.

3. பஞ்சாலை தொழிலாளர்களுக்கு இடைக்கால நிவாரணம் வழங்க தொழிற்தகராறுகள் சட்டப்பிரிவு 10-B-யின்கீழ் அரசாணை (டி) எண் 690, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 13-9-2011-ன்மூலம் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மேற்கண்ட அரசாணையை ஆட்சேபித்து, சுமார் 400-க்கும் மேற்பட்ட ரிட் மனுக்கள் பஞ்சாலை நிர்வாகங்களினால் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. அவ்வாறு தொடரப்பட்ட வழக்குகள் எல்லாம் முடிவுற்று, தற்போது 13-4-2012 அன்று உயர் நீதிமன்றம் அரசாணைகள் இரண்டும் சட்டப்படியானவை, செல்லத்தக்கவை என்று தீர்ப்பு வழங்கியுள்ளது. பஞ்சாலைத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு குறித்த இத்தொழிற்தாவா சென்னை, தொழில் தீர்ப்பாயத்தின் முன்பு தற்போது நிலுவையில் உள்ளது. தீர்ப்பாயத்தின் தீர்வுத்தைப் பொறுத்தே ஊதிய உயர்வு வழங்குவது குறித்து முடிவு மேற்கொள்ள இயலும்.

252—

பணி மூப்பு வழங்குதல்

வினா எண் 274—திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயின்ற மாணவர்கள் அரசு தொழிற் பயிற்சி நிலையங்களிலும் நிறைவு செய்தவர்கள் பதிவு மூப்பை இழக்க நேர்ந்ததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. சி.த. செல்லபாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

(அ) வேலைவாய்ப்பு அலுவலகங்களில் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் படித்தவர்களுக்கும், அரசு தொழிற் பயிற்சி